# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 2372/F/2024**

திரு.S.ரத்தினம் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
மதிப்பீட்டுத் துறை,
பிராட்வே,
சென்னை-600 003. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.S.ரத்தினம் அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுதகவல் அலுவலர் திரு.க.சிவக்குமார், சார்புச் செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 25/07/2024 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் மூலம் ஒருங்கிணைந்த பொறியாளர் தேர்வு நடைபெற்ற நாள் 06.01.2024 மற்றும் 07.01.2024 ஆகிய தேதிகளில் நடைபெற்றதாகவும் அதில் தனது மகன் R.நவீன்குமார் கலந்துகொண்டு சிறப்பாக தேர்வு எழுதியதாக தெரிவித்துள்ளார் எனவும் தேர்ச்சி பெற்றவர்கள் விவரம் எந்த அடிப்படையில் வெளியிடப்படுகிறது என்பன போன்ற 7 இனங்களில் தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 10.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என மனுதாரர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 27.09.2024 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டு அலுவலருக்கு தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 29.11.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். மனுதாரர் தனக்கு மேல்முறையீட்டு அலுவலர் சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(3)ன் கீழ் 30.01.2025 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 10.09.2024 மற்றும் 29.11.2024 தேதியிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

- **மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் 25.07.2024 நாளிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கும், இவ்வழக்கின் மனுதாரரின் மகன் திரு.R.நவீன்குமார் அவர்களிடம் உரிய அனுமதி பெற்று அவர் அனுமதி வழங்கும் பட்சத்தில் சரியான முழுமையான தகவல்களை தகவல் அறியும் உரிமைச் சட்டம் பிரிவு 7(6)ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது என்ற முத்திரையுடன் பொதுத்தகவல் அலுவலர் கையொப்பமிட்டு மனுதாரருக்கு ஒப்புகை அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் மனுதாரருக்கு வழங்கிய தகவல் ஆகியவற்றை இணைத்து ஒரு அறிக்கையாக தயார் செய்து தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் 12.05.2026 அன்று இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 2372/F/2024</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்,
மதிப்பீட்டுத் துறை,
பிராட்வே,
சென்னை-600 003.

**<u>மேல்முறையீட்டாளர்:-</u>**

திரு.சா.இரத்தினம்,
14, விவேகானந்தா தெரு,
எம்.டி.ஜி. நகர்,
கீழ்பெரும்பாக்கம்,
விழுப்புரம்-605602.

Copy to file: KR/PA